RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s639

OPEN ACCESS



# புறநானூற்றில் காணலாகும் மன்னர்களுக்கும் மக்களுக்கும், சான்றோர்களுக்கிடையேயுள்ள மனிதநேயப் பண்பாடுகள் ஓர் ஆய்வு

ர. ஜெயப்பிரியா [அ, *]

[அ] தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்- 636011, தமிழ்நாடு, இந்தியா.

# A Study of the Humanistic Cultures Among Kings, Peoples, and Saints Found in the Purananuru

R. Jeyapriya [a, *]

[a] Department of Tamil, Padmavani Arts & Science College for Women, Salem-636011, Tamil Nadu, India

* Corresponding Author: jpriyabharath5@gmail.com

Received: 24-10-2021
Revised: 26-04-2022
Accepted: 09-05-2022
Published: 30-07-2022

## ABSTRACT

The Sangam period signifies the noblest way of life, showing love to all living beings in the world and relieving the suffering of all living beings. Sangam society considered the welfare of not only the individual but also the society as a whole. The ancient Tamils were the ones who lived by the ethics of adhering to the chief of all the virtues, which is the partaking of food that has been shared with others. Selfish rivalries and jealousies are responsible for the major problems today. Literature, which gives pleasure not only to the human senses but also to knowledge, is a mirror that highlights the problems of human life. Literature in all languages has evolved and changed from time to time according to the situation. In that order, the Sangam literature that appeared during the Sangam period speaks of the disciplines to be followed in the life of man. What distinguishes man from other beings is the quality of humanity. The Purananuru points out such a culture. The purpose of this study is to illustrate the humanistic culture between the kings, the people, and the saints of the Sangam age through Purananuru.

**Keywords:** Love, kings, Sangam Age, Welfare

## முன்னுரை

உலகத்தில் உள்ள எல்லா உயிர்களிடமும் அன்பு காட்டுவதும் அனைத்து உயிர்களின் துன்பம் போக்குவதும் போன்ற உன்னதமான வாழ்க்கை நெறியைச் சங்ககாலம் உணர்த்துகிறது. சங்ககாலச் சமுதாயம் தனிமனிதனுக்கு மட்டுமின்றி சமுதாயம் முழுமைக்குமான நலனையும் எண்ணியது. 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்' அறநெறியைக் கடைபிடித்து வாழ்ந்தவர்கள் பழந்தமிழர்கள். இன்றுள்ள முக்கியப் பிரச்சனைகளுக்கு சுயநலமிக்க போட்டிகளும், பொறாமைகளும் காரணமாக அமைகின்றன. சங்ககால மன்னர்களுக்கும் மக்களுக்கும், சான்றோர்களுக்கிடையேயுள்ள மனிதநேயப் பண்பாட்டை புறநானூறு வாயிலாக எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். மனிதநேயம் என்பது நாடு, இனம், மொழி என்ற எல்லைகளைக் கடந்து நிற்பதாகும். மனித இனத்தின் நாகரீகப் பண்பாட்டு வளர்ச்சியோடு பிணைந்து நிற்பது மனிதநேயம். இது ஓர் உயரிய பண்பாடாகும். இப்பண்பாட்டினால் மக்களிடையே அன்பு வளரும். ஏற்றத்தாழ்வுகள் நீங்கும். ஒப்புரவு நிலைக்கும். மனித ஆற்றல் உயரும். உலக மக்களிடையே ஒற்றுமை ஓங்கும் மானுடம் போற்றுவதே மனிதநேயம் எனப்படும்.

## தொல்காப்பியத்தில் அன்பு

மனிதநேயம் என்பது மனிதர்களுக்கு இடையில் இயற்கையாக எழும் ஓர் உயர்ந்த உணர்வாகும். உலகில் இன்பம் நிலவுவதற்கு அடிப்படைக் காரணம் அன்பும் இன்பமும் ஆகும். இந்த இரண்டு நிகழ்வுகளும் அவரவர் மனத்தைப் பொறுத்தே அமையும் என்கிறார் தொல்காப்பியர். இச்செயலை,

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது

தான் அமர்ந்து வரும் மேவற்றாகும்"

என பொருளியல் நூற்பாவில் அவர் எடுத்துரைக்கின்றார் (Subramaniyan, 1998). இன்பம் என்பது உலக உயிர்கள் அனைத்திற்கும் பொருந்திவரும் விருப்பமுடைமை ஆகும்.

## அன்புடன் கொடுத்தல்

அன்பு என்ற ஒன்று எல்லா நிலைகளிலும் வற்புறுத்தப்பட்டுள்ளது. அன்பு இல்லாமல் எந்தவொரு பொருளைக் கொடுத்தாலும் இரவலர்கள் பெறமாட்டார்கள் எனும் செய்தி புறநானூற்றில்

"முற்றிய திருவின் மூவர் ஆயினும்

பெட்பின்று ஈதல் யாம் வேண்டாமே"

எனும் பாடலில் பெருந்தலைச் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார் (Balasubramaniyan, 2004). கொடுப்பவன் எவ்வளவு உயர்ந்த நிலையிலிருந்தாலும் அன்பின்றி அவன் கொடுக்கும் எந்தவொரு பொருளையும் இரவலர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதைப் புலவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

## ஈதல்

அறம், பொருள், இம்மைப்பயன், மறுமைப்பயன் ஆகியவற்றை அடைய ஒருவன் தன்னிடமுள்ள செல்வத்தைப் பிறருக்குக் கொடுக்க வேண்டும். இதனை

"செல்வத்துப் பயனே ஈதல்

துய்ப்போம் எனினே, தப்புந பலவே"

எனும் பாடலில் நக்கீரர் குறிப்பிடுகிறார் (Balasubramaniyan, 2004). இதிலிருந்து பிறர்க்கு உதவாமல், சேமித்து வைக்கும் செல்வத்தால், எந்தப் பயனும் இல்லை என்பதை புறநானூறு வலியுறுத்துகிறது.

## கருணையுணர்வு

எங்கெல்லாம் துயரம் தோன்றியதோ, அங்கெல்லாம் தமது கருணையினைக் காட்டச் சான்றோர் தவறவில்லை. புலவர்கள் பரிசில் பெறுவது மட்டுமின்றி, மன்னர்கள் தவறு செய்த போதெல்லாம் தவறைச் சுட்டிக்காட்டி அறிவுரை கூறித்தடுத்தாட் கொண்டனர்.

"அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே

கோடியாத்து நாடு பெரிது நந்தும்

மெல்லியன் கிழவனாகி வைகலும்"

என்ற பாடலில் மக்களின் நிலையறிந்து அன்பு கெடாதவாறு மன்னன் வரி வாங்க வேண்டுமென நயம்பட புலவர் உரைக்கின்றார் (Balasubramaniyan, 2004). மன்னர் பகைவரின் பால் பெறும் வெற்றிக்கு உழவர்களின் ஏர்முனை அடிப்படையாக உள்ளது என்பதை சோழன் நலங்கிள்ளிக்கு முதுகண்ணன் சாத்தனார் அறிவுரை கூறி நல்வழிப்படுத்துகிறார்.

## பொதுநலம் விரும்புதல்

ஒருவர் எக்காரணம் கொண்டும் சுயநலத்தோடு வாழ்தல் கூடாது. பொதுநலத்தோடுதான் வாழவேண்டும் என்பதை

“உண்டாலம்ம இவ்உலகம் - இந்திரர்

அமிழ்தம் இயைவது ஆயினும்

இனிது எனத் தமியர் உண்டலும் இலரே

முனிவிலர் துஞ்சலும் இலர்

பிறர் அஞ்சுவது அஞ்சிப்

புகழ்எனின் உயிருங் கொடுக்குவர்

பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்

அனையர் அயர்விலர் அன்னமாட்சியராகித்

தமக்கென முயலா நோன்தாள்

பிறர்க்கென முயலுநர் உண்மையானே”

இப்பாடலடிகள் உணர்த்துகிறது (Balasubramaniyan, 2004). அமிழ்தமே உண்ணக் கிடைத்தாலும் தனித்து உண்ணாமல் பிறரோடு பகிர்ந்து உண்ணும் சான்றோர்கள். இவர்கள் தீய செயல்களைச் செய்ய அஞ்சுபவர்கள். புகழ் என்றால் உயிரையும் கொடுப்பவர்கள். உலகத்தையே பரிசாகக் கொடுத்தாலும் பழிவரும் செயல்களைச் செய்வதற்கு நாணும் பண்புடையவர்கள். எந்தச் சூழ்நிலையிலும் பொதுநலத்தையே விரும்பியவர்கள் சான்றோர்கள் என்பதை புறநானூறு பொதுநலத் தத்துவத்தைச் சிறப்பிக்கின்றது.

## நன்மையே செய்தல்

ஒருவர் நமக்கும் தீமை செய்தாலும், நாம் அவருக்கு நன்மையே செய்ய வேண்டும். நன்மை செய்ய இயலாவிட்டாலும் தீமை செய்யக்கூடாது. அதுதான் எல்லோரும் விரும்பும் செய்கையாகும். இதனை

“நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்

அல்லது செய்தல் ஓம்புமின் அதுவே

எல்லாரும் உவப்ப தன்றியும்

நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே”

என்று நரிவெரூஉத்தலையார் குறிப்பிட்டுள்ளார் (Balasubramaniyan, 2004). நமக்குத் தீமை செய்தவர்களுக்கும் நன்மையையே செய்ய வேண்டும் என்ற பண்பு சான்றோர்களிடம் இருந்துள்ளது. இப்பண்பைப் புலவர் எடுத்துக்கூறிய நிலையிலிருந்து தெரிந்து கொள்ளமுடிகின்றது.

## குமணவள்ளலின் மனிதநேயம்

குமணவள்ளல் தன் தம்பி இளங்குமணனுக்கு அஞ்சி காட்டிலே வாழ்ந்தான். காட்டிலே இருப்பவனிடம் என்ன இருக்கும் என்பதை அறியாதப் புலவர் பெருஞ்சித்திரனார், அவனைப் பாடிப் பரிசில் பெறச் சென்றார். தன்னைப் புகழ்ந்து பாடிய புலவருக்குக் கொடுப்பதற்கு ஒன்றுமில்லையே என எண்ணினான் குமணன். தன் இடுப்பிலிருந்து வாளை எடுத்து தன் தலையைக் கொய்து என் தம்பியிடம் கொடுத்தால், பொன்னும் பொருளும் அளிப்பான் என்றான். இத்தகைய குமணின் பெருமையை

“நாடு இழந்தனனினும் நனி இன்னாது என

வாள் தந்தனனே, தலை எனக்கு ஈய”

என்னும் பாடலடி குமணனின் கொடைச்சிறப்பை விளக்குகிறது (Balasubramaniyan, 2004).

## கர்ணனின் மனிதநேயம்

கண்ணதாசனின் கவிதை வரிகளில் உருவான மனிதநேயக் கருத்துக் கொண்ட இப்பாடல் கர்ணனுக்குப் பொருந்தியதாக அமைந்துள்ளது-

“என்ன கொடுப்பான் எவை கொடுப்பான் என்று

இவர்கள் எண்ணும் முன்னே

பொன்னைக் கொடுப்பான் பொருள் கொடுப்பான்

போதாது போதாது என்றால்

இன்னும் கொடுப்பான் இவையாவும் குறைவென்றால்

எங்கள் கர்ணன்

தன்னைக் கொடுப்பான் தன் உயிரும் கொடுப்பான்”

எனக் கவிஞர் குறிப்பிடுகிறார் (Kannathasan, 2008). கர்ணன் பிறருக்காகத் தன் உயிரையும் கொடுக்கும் தூய உள்ளம் கொண்ட ஈகைப் பண்புமிக்க மனிதநேயனாகவும் விளங்கினான். கர்ணனின் உயர்ந்தநெறி குமணவள்ளலின் மனிதநேயத்தோடு ஒப்பிடும் வகையில் சிறப்புப் பெறுகின்றது.

## மக்கட்பண்பு இல்லாதோர்

உலகில் மனிதராகப் பிறந்தவர்கள் மக்களுக்குரியப் பண்புகளைப் பெற்று வாழவேண்டும். மக்களைப் போன்று உருவ ஒற்றுமையும், அறிவு நுட்பமும் பெற்றிருந்தாலும் அன்பு உள்ளவர்களே மக்கள். மக்கட்பண்பு இல்லாதவர்கள் மரம் என்று வள்ளுவர் மக்களை அஃறிணைப் பொருளோடு ஒப்பிடுகிறார். இதனை

“அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்

மக்கட் பண்பில்லா தவர்”

என்ற குறள் மனிதருக்குரிய மக்கட்பண்பை உணர்த்துகிறது. மனிதராகப் பிறந்தவர்கள் மக்களுக்குரியப் பண்புகளைப் பெற்று வாழவேண்டும் (Parimelzhagar, 2007).

## முடிவுரை

நாட்டில் மதங்களால் சாதியால், மொழியால், மனிதநேயமற்று காணப்படுகிறது. சங்ககாலத்தில் அன்பும் கருணையும், அருளும் இருந்திருக்கின்றது. இந்தக் காலக்கட்டத்தில் இப்புவியில் எந்த இடத்தில் துன்பம் நிகழ்ந்தாலும் உதவி செய்வதற்கு புறநானூற்றுக்கால மனிதநேயமிக்க தியாக உள்ளங்கள் தேவை என இவ்வாய்வில் அறிவுறுத்தப்படுகிறது.

## References

Balasubramaniyan Ku.ve. (2004) purananooru moolamum uraium, New Century book House, Chennai, India.

Kannathasan, (2008) Kannathasanin Kavithaikal, Kannathasan Pathippagam, Chennai, India.

Parimelzhagar, (2007) Thirukkural, Thirunelveli Thenninthiya Saiva Sithantha Nurpathippu Kalagam, Chennai, India.

Subramaniyan, S. V. (1998) Tholkkappiyam, manivasakar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License